## மணவாள மாமுனிகள் அருளிச் செய்த உபதேசரத்தினமாலை

### தனியன்

### கோயில் கந்தாடை அண்ணன் அருளிச் செய்தது

முன்னம் திருவாய்மொழிப்பிள்ளை தாம் உபதேசித்த * நேர்
தன்னின் படியைத் தணவாத சொல் மணவாள முனி *
தன் அன்புடன் செய் உபதேச ரத்தின மாலை தன்னை *
தன் நெஞ்சு தன்னில் தரிப்பவர் தாள்கள் சரண் நமக்கே

---

## மணவாள மாமுனிகள் அருளிச் செய்த உபதேசரத்தினமாலை

** எந்தை திருவாய்மொழிப்பிள்ளை இன்னருளால் *
வந்த உபதேச மார்க்கத்தைச் - சிந்தை செய்து **
பின்னவரும் கற்க * உபதேசமாய்ப் பேசுகின்றேன் *
மன்னிய சீர் வெண்பாவில் வைத்து 1

** ஆழ்வார்கள் வாழி * அருளிச் செயல் வாழி *
தாழ்வாதும் இல் குரவர் தாம் வாழி ** - ஏழ் பாரும்
உய்ய * அவர்கள் உரைத்தவைகள் தாம் வாழி *
செய்ய மறை தன்னுடனே சேர்ந்து 3

** ஐப்பசியில் ஓணம் * அவிட்டம் சதயம் இவை *
ஒப்பிலவா நாள்கள் உலகத்தீர்! ** - எப்புவியும்
பேசு புகழ் * பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார் *
தேசுடனே தோன்று சிறப்பால் 6

** மாறன் பணித்த * தமிழ் மறைக்கு மங்கையர் கோன் *
ஆறங்கம் கூற அவதரித்த ** - வீறுடைய
கார்த்திகையில் கார்த்திகை நாள் * இன்றென்று[1] காதலிப்பார் *
வாய்த்த மலர்த் தாள்கள் நெஞ்சே! வாழ்த்து 9

** ஏரார் வைகாசி * விசாகத்தின் ஏற்றத்தை *
பாரோர் அறியப் பகர்கின்றேன் ** - சீராரும்
வேதம் தமிழ் செய்த * மெய்யன் எழில் குருகை *
நாதன் அவதரித்த நாள் 14

** உண்டோ வைகாசி * விசாகத்துக்கு ஒப்பொரு நாள்? *
உண்டோ சடகோபர்க்கு ஒப்பொருவர்? ** - உண்டோ
திருவாய்மொழிக்கு ஒப்பு * தென் குருகைக்கு உண்டோ *
ஒரு பார் தனில் ஒக்கும் ஊர் 15

---

[1] என்றென்று

** உண்டோ திருப்பல்லாண்டுக்கு * ஒப்பதோர் கலை தான்? *
உண்டோ பெரியாழ்வார்க்கு ஒப்பொருவர்? ** - தண் தமிழ் நூல்
செய்தருளும் ஆழ்வார்கள் தம்மில் * அவர் செய் கலையில் *
பைதல் நெஞ்சே! நீ உணர்ந்து பார் 20

** இன்றோ திருவாடிப்பூரம் * எமக்காக
அன்றோ * இங்கு ஆண்டாள் அவதரித்தாள் ** - குன்றாத
வாழ்வான * வைகுந்த வான் போகம் தன்னை இகழ்ந்து *
ஆழ்வார் திருமகளாராய் 22

** ஏரார் மதுரகவி * இவ்வுலகில் வந்துதித்த *
சீராரும் சித்திரையில் சித்திரை நாள் ** - பார் உலகில்
மற்றுள்ள ஆழ்வார்கள் * வந்துதித்த நாள்களிலும் *
உற்றது எமக்கென்று நெஞ்சே ஓர் 25

** வாய்த்த திருமந்திரத்தின் * மத்திமமாம் பதம் போல் *
சீர்த்த மதுரகவி செய் கலையை ** - ஆர்த்த புகழ்
ஆரியர்கள் தாங்கள் * அருளிச் செயல் நடுவே *
சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து 26

** இன்று உலகீர்! சித்திரையில் * ஏய்ந்த திருவாதிரை நாள் *
என்றையினும் இன்றிதனுக்கு ஏற்றம் என் தான் ** - என்றவர்க்குச்
சாற்றுகின்றேன் கேண்மின் * எதிராசர் தம் பிறப்பால் *
நாற்றிசையும் கொண்டாடும் நாள் 27

** ஆழ்வார்கள் தாங்கள் * அவதரித்த நாள்களிலும் *
வாழ்வான நாள் நமக்கு மண்ணுலகீர்! ** - ஏழ் பாரும்
உய்ய * எதிராசர் உதித்தருளும் * சித்திரையில்
செய்ய திருவாதிரை 28

** எந்தை எதிராசர் * இவ்வுலகில் எந்தமக்கா *
வந்துதித்த நாள் என்னும் வாசியினால் ** - இந்தத்
திருவாதிரை தன்னின் * சீர்மை தனை நெஞ்சே! *
ஒருவாமல் எப்பொழுதும் ஓர் 29

** எம்பெருமானார் தரிசனம் என்றே இதற்கு *
நம்பெருமாள் பேர் இட்டு நாட்டி வைத்தார் ** - அம்புவியோர்
இந்தத் தரிசனத்தை * எம்பெருமானார் வளர்த்த *
அந்தச் செயல்[2] அறிகைக்கா 38

** தெள்ளியதா நம்பிள்ளை * செப்பு நெறி தன்னை *
வள்ளல் வடக்குத் திருவீதிப் - பிள்ளை ** இந்த
நாடறிய * மாறன் மறைப் பொருளை நன்கு உரைத்தது *
ஈடு முப்பத்தாறாயிரம் 44

[2] செயலை

** நம்பெருமாள் நம்மாழ்வார் * நஞ்சீயர் நம்பிள்ளை
என்பர் * அவரவர் தம் ஏற்றத்தால் ** - அன்புடையோர்
சாத்து[3] திருநாமங்கள் * தான் என்று நன்னெஞ்சே! *
ஏத்து அதனைச் சொல்லி[4] நீ இன்று 50

** அன்ன புகழ் முடும்பை * அண்ணல் உலகாசிரியன் *
இன்னருளால் செய்த கலை யாவையிலும் ** - உன்னில்
திகழ் வசன பூடணத்தின் சீர்மை * ஒன்றுக்கு இல்லை *
புகழ் அல்ல இவ்வார்த்தை மெய் இப்போது 53

** ஞானம் அனுட்டானம் இவை * நன்றாகவே உடையன்
ஆன * குருவை அடைந்தக்கால் ** - மாநிலத்தீர்!
தேனார் கமலத் * திருமாமகள் கொழுனன் *
தானே வைகுந்தம் தரும் 61

** முன்னோர் மொழிந்த * முறை தப்பாமல் கேட்டு *
பின் ஓர்ந்து தாம் அதனைப் பேசாதே ** - தம் நெஞ்சில்
தோற்றினதே சொல்லி * இது சுத்த உபதேச வர
வாற்றது என்பர் * மூர்க்கர் ஆவார் 71

** பூருவாசாரியர்கள் * போதம் அனுட்டானங்கள் *
கூறுவார் வார்த்தைகளைக் கொண்டு நீர் - தேறி **
இருள் தருமா ஞாலத்தே * இன்பம் உற்று வாழும் *
தெருள் தரு மா தேசிகனைச் சேர்ந்து 72

** இந்த உபதேச * ரத்தின மாலை தன்னை *
சிந்தை தன்னில் நாளும் சிந்திப்பார் ** - எந்தை
எதிராசர் * இன்னருளுக்கு என்றும் இலக்காகி *
சதிர் ஆக வாழ்ந்திடுவார் தாம் 73

**எறும்பியப்பா அருளிச் செய்தது**

மன்னுயிர்காள் இங்கே மணவாள மாமுனிவன் *
பொன்னடியாம் செங்கமலப் போதுகளை * - உன்னிச்
சிரத்தாலே தீண்டில் * அமானவனும் நம்மை *
கரத்தாலே தீண்டல் கடன் 74

**மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்**

---

[3] சாற்று

[4] சொல்லு